மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னைக் கல்லூரிக்கே போதுமான மாணவர்கள் வரவில்லை என்று சொன்னேன். போதுமான மாணவர்கள் முன்னுக்கு வந்தால் நெல்லையில் அல்ல, வேறு எங்கு வேண்டுமானாலும் புதிய கல்லூரி திறப்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

திரு. இல. பலராமன் : இந்தக் கால்நடை கல்லூரிக்குப் படிப்பு ஆண்டு அதிகமாக இருப்பதனால் மாணவர்கள் வரவில்லை என்று பொதுவாக பிரச்சினை இருக்கிறது. அதைக் குறைக்க அரசாங்கம் ஏதாகிலும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆண்டு கணக்கைப் பற்றி ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. வருவாய் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால் தான் மாணவர்கள் அதிகமாக வரவில்லை. மாட்டு ஆஸ்பத்திரி டாக்டர் தானே என்று நினைக்கிறார்கள். எம்.பி.பி.எஸ்.-க்குத்தான் அதிகமான கிராக்கி இருக்கிறது. இது ஆண்டைப் பொறுத்ததல்ல, ஊதியத்தைப் பொறுத்துத்தான்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : வெடிரினரி காலேஜில் டிகிரி கோர்ஸுக்கு ஆண்டைக் குறைத்து அதை டிப்ளமா கோர்சாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தகுதியான டாக்டர்கள் வேண்டுமானால், இப்பொழுதிருக்கிற காலம் அவசியம் என்று சர்க்கார் உணருகிறது ?

DR. H. V. HANDE : In view of the fact that there is not much demand for seats in the Veterinary College because there is not adequate number of veterinary hospitals both in the headquarters and taluks, will the Government come forward at least to increase the number of veterinary hospitals in places like Ramanathapuram?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது 267 பிளாக்குகளில் கால்நடை விஸ்தரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. அதிலே போதுமான டாக்டர்கள் பணியாற்றுவதற்கு இடம் இருக்கிறது. மீண்டும் கூடுதலாக ஆஸ்பத்திரிகள் திறக்கவேண்டுமென்றால், நிதிநிலை சரியானால்தான் செய்யப்படும்.

பஞ்சாயத்துக்கள் பயிரிடும் பழத் தோட்டங்கள்

*70 வினா—**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் துவக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பழத் தோட்டங்களை அமைப்பதிலும், தொடர்ந்து நிர்வகிப்பதிலும் ஏற்படும் அதிகமான செலவினைக் குறைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

1967 ஜூன் 24]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்துப் பழத் தோட்டங்களை அமைப்பதற்காகும் செலவை முறைப்படுத்துவதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன :--

(1) வெவ்வேறு பழத்தோட்டங்களில் பழ மரங்கள் நடுவதற்கும், பழத் தோட்டங்களைப் பேணுவதற்கும் செலவு வித விவர அட்டவணை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(2) விவர அட்டவணையின் விதத்திற்கு அதிகமான செலவு செய்ய வேண்டிவந்தால் செலவிடுவதற்கு முன் பஞ்சாயத்து யூனியன் மன்றம் சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரியின் இசைவைப் பெற வேண்டும்.

(3) செடி நட்ட நாளிலிருந்து முதல் மூன்றுண்டுகளுக்கு மட்டுமே பேணுதல் செலவு அளிக்கப்படும். தென்னைக்கு மட்டும் 5 ஆண்டுகளுக்குப் பேணுதல் செலவு அளிக்கப்படும்.

(4) நடப்பட்ட பழ மரங்கள், ஒவ்வோர் ஆண்டிலும் ஏப்ரல் 1-ம் தேதியன்று பிழைத்துள்ளதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட பிறகு அவை நன்கு காப்பாற்றப்பட்டால் மட்டுமே, இரண்டாவது, மூன்றுவது ஆண்டுகளில் பேணுதல் செலவு அளிக்கப்படும்.

(5) புதிய பழத் தோட்டங்கள் அமைப்பதற்கோ அல்லது பழைய பழத் தோட்டங்களை விரிவாக்கம் செய்வதற்கோ மேற்கொண்டும் செலவிடக் கூடாதென இப்போது ஆணையிட்டுள்ளது. ஏனென்றல் இத்திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகையோ மிக அதிகம். ஆனல், இதன் மூலம் கிட்டும் பலனே திருப்தியாக இல்லை. செலவிடுவதற்கு நிகராகப் பயன்தரும் பழ மரத் தோட்டங்களைப் பொறுத்தவரையில் கூடுமானவரை மிகக் குறைந்த அளவு செலவு செய்யுமாறு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பழத் தோட்டங்கள் ஆரம்பித்து இப்பொழுது ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அரசாங்கக் கணக்குப்படி, இதுவரை எத்தனை டன் பழங்கள் உற்பத்தி செய்து, எந்த நிலையில் விற்று இருக்கிறுர்கள், என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தகவல் இல்லை; தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. என் சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து இந்த பஞ்சாயத்துப் பழத் தோட்டங்கள் மூலம் சரியான வருமானம் வரவில்லை என்று குறிப்பிட்டதால், இந்தப் பயன் அற்ற முறையை நீக்கிவிட்டு அதற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை அந்த அந்தப் பஞ்சாயத்தில்

உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கோ அல்லது ஏழை விவசாயி களுக்கோ கொடுத்து வேறு சாகுபடி செய்யும் முறையை அமல் படுத்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தத் திட்டத்தின் மூலம் பலன் இல்லை என்பதால்தான் புதிதாகப் பழத்தோட்டங்களுக்காக செலவு செய்யக் கூடாது என்று கட்டாயமாக உத்தரவு போடப் பட்டிருக்கிறது. நிலங்களை வேறு வகையில் பயன்படுத்துவது பற்றி அது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயத் தோட்டங்களால் இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இந்த நட்டத்தை ஈடு செய்யும் வகையில், நட்டத்தைத் தவிர்க்கும் வகையில் 'டின்ட் ஃப்ட் ரூட்ஸ்' பக்குவப்படுத்தப்பட்ட பழங்களை வெளிநாடு களுக்கு அனுப்ப (குறுக்கீடு: உற்பத்தியே இல்லையே) ஏற்கனவே இருக்கும் பஞ்சாயத்துப் பழத் தோட்டங்களில் உற்பத்தியாகும் பழவகைகளைப் பக்குவப்படுத்தி வெளி நாடுகளுக்கு . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக் கொண்டால், பஞ்சாயத்துப் பழத் தோட்டத்தால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தோடு, பதப்படுத்தி அடைக்க டின் தயாரிக்க ஆகும் நஷ்டமும் வந்து சேரும்.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : கனம் சபாநாயகர் அவர் களே, பஞ்சாயத்து யூனியன்களில் பழத் தோட்டம் போடுவது என்பதால் அரசாங்கத்திற்கு அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அதிலிருந்து எந்தவிதமான பயனும் பெற்றதாகத் தெரியவில்லை. ஆகையினால், இது சம்பந்தமாக தென்னங்கன்றுகள் நடுவதோ அல்லது பழத்தோட்டங்கள் போடுவதோ இவைகளை எல்லாம் விட்டு விட்டு, தனித்தனி விவசாயிகளிடம் பிரசாரம் செய்து அவர் களே இவற்றை உற்பத்தி செய்யத் தூண்டுதல் செய்ய முன் வருமா? பணத்தை வீண் விரயம் செய்யாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் இந்த நல்ல யோசனையை இப்பொழுது இந்த அரசாங்கத்திற்குக் கொடுத்திருப்பதிலே ஒரு மகிழ்ச்சிதான்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இது போலவே, தேன் பண்ணை, மீன் பண்ணை என்றெல்லாம் வைப்பதால் ஒன்றுமே பிரயோசனம் இல்லை, அங்கெல்லாமும் விரயம் ஆகிறது. இவை களையும் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இவைகளைப்பற்றி யெல்லாம் விவரங்களைக் கண்டறிய சிறு சிறு குழுக்களை அமைக்க லாம் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறேன்.

1967 ஜுன் 24]

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்தப் பழத் தோட்டங்களில் பெயர்ப் பலகை மட்டும் இருந்து, பழச் செடிகளே இல்லாமல் இருக்கும் இடங்களிலே இவற்றை எடுத்துவிடலாம் என்று பஞ்சாயத்து யூனியன்களே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஏற்கனவே அரசாங்கத்திற்கு தெரிந்திருக்கிற தகவலை கனம் உறுப்பினர் கொடுத்ததற்காக நன்றி. (சிரிப்பு)

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பழத்தோட்டங்கள் அமைத்தது வறுமையைப் போக்க, உணவு நிலைமையைச் சமாளிக்க, அந்தக் காலத்தில், பெரிய நோக்கத்தை வைத்து இந்தப் பழத்தோட்டங்கள் வைக்கப்பட்டன. அப்படி வைத்தால் எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு பழுக்கும் என்று தெரியுமா ? இன்னும் நன்றாக வளர்வதற்கு முன்னாலேயே பலன் வரும் என்று அமைச்சர்கள் நம்புகிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தப் பழத் தோட்டங்கள் சில ஆண்டுகளுக்குப் பிறகு நன்மைகளைப் பயக்கும் என்று கனம் உறுப்பினர் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட நன்மைகளோடு, இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளலாம். ' மரம் பழுத்தால் வெளவாலை வா என்று அழைப்பரோ ' என்றபடி, வெளவால்களையும் உற்பத்தி செய்யலாம் என்பதற்குக் கூட திட்டம் போடலாம்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்குப் படி.

*71 வினு—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு கொடுக்கப்படும் அலவன்சை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், ஏற்கனவே ஒவ்வொருவரும் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக வருவதற்கு, ரூ. 30,000 அல்லது ரூ. 40,000 செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சென்ற வருஷம் இந்தி அஜிடேஷன் காரணமாக இன்னும்கூட ஒரு ஆயிரம், இரண்டாயிரம் என்று 60,000 அல்லது 70,000 செலவாகிப் போய் விட்டது. ஆகவே சேர்மன் அலவன்சைக் கூட்டிக் கொடுக்க அனுதாபத்தோடு அரசாங்கம் கவனிக்குமா ?